உ

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும்

சிதம்பரம்

இராமலிங்கப்பிள்ளைஅவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

மகாதேவமாலை.

இஃது.

சிதம்பரம்.

பு. வே. சுந்தரம்பிள்ளை கேட்டுக்கொண்டபடி.

இவை.

சரவணபுரம்.

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

புரசபாக்கம்.

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்கஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1890

பதினோராம்புத்தகம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்

சிதம்பரம்- இராமலிங்கசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

மகாதேவமாலை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கருணைநிறைந்தகம்புறமுந் துளும்பிவழிந் துயிர்க்கெல்லாங்களைகணாகித், தெருணிறைந்தவின்பநிலைவளர்க்கின்றகண்ணுடையோய் சிதையாஞானப், பொருணிறைந்தமறையமுதம் பொழிகின்றமலர்வாயோய்பொய்யனேனென்றன், மருணிறைந்த மனக்கருங்கற்பாறையுமுட்கசிந்துருக்கும்வடிவத்தோயே.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உலகநிலைமுழுதாகியாங்காங்குள்ளவுயிராகியுயிர்க்குயிராமொளிதானாகிக், கலகநிலையறியாதகாட்சியாகிக் கதியாகி மெய்ஞ்ஞானக் கண்ணதாகி, யிலகுசிதாகாசமதாய்ப்பரமாகாச வியல்பாகியிணையொன்றுமில்லாதாகி யலகிலறிவானந்தமாகிச் சச்சிதானந்தமயமாகி யமர்ந்த தேவே. (க)

உலகமெலாந்தனிநிறைந்தவுண்மையாகியோகியர்
தமதநுபவத்தினுவப்பாயென்றுங், கலகமுறுவுபசாந்தநி
லையதாகிக் களங்கமற்றவருண்ஞானக்காட்சியாகி,விலகு
துருநிபிடவா னந்தமாகிமீதானத்தொளிர்கின்ற விளக்க
மாகி, யிலகுபராபரமாய்ச்சிற்பரமாயன்பரிதய மலர்மீ
திருந்தவின்பத்தேவே. (௨)

வித்தாகிமுளையாகிவிளைவதாகிவிளைவிக்கும்பொரு
ளாகிமேலுமாகிக்,கொத்தாகிப்பயனுகிக்கொள்வோனு
கிக் குறைவாகிநிறைவாகிக்குறைவிலாத, சத்தாகிச்சித்
தாகியின்பமாகிச்சதாநிலையாயெவ்வுயிர்க்குஞ்சாட்சியா
கி, முத்தாகிமாணிக்கமாகித்தெய்வ முழுவயிரத்தனிம
ணியாய்முளைத்ததேவே. (௩)

வேதாந்தநிலையாகிச்சித்தாந்தத்தின் மெய்யாகிச்ச
மரசத்தின்விவேகமாகி, நாதாந்தவெளியாகி முத்தாந்த
த்தினடிவாகிநவநிலைக்குநண்ணுதாகி, மூதாண்டகோடி
யெல்லாந்தாங்கிநின்றமுதலாகிமனுநீதமுத்தியாகி, வா
தாண்டசமயநெறிக்கமையாதென்று மௌனவியோம
த்தினிடைவயங்குந்தேவே. (௪)

தோன்றுதுவிதாத்துவிதமாய்விசிட்டாத்துவிதமா
ய்க்கேவலாத்துவிதமாகிச், சான்றசுத்தாத்துவிதமாய்ச்
சுத்தந்தோய்ந்தசமரசாத்துவிதமுமாய்த் தன்னையன்றி,
மூன்றுநிலைவேறொன்றுமிலதாயென்றுமுள்ளதாய்நிர

சயவுணர்வாயெல்லா, மீன்றருளுந்தாயாகித்தந்தையாகி
எழிற்குருவாய்த்தெய்வமதாயிலங்குந்தேவே. (ரு)

பரமாகிச்சூக்குமமாய்த் தூலமாகிப் பரமார்த்தநி
லையாகிப்பதத்தின்மேலாஞ், சிரமாகித்திருவருளாம்வெ
ளியாயான்மசிற்சத்தியாய்ப்பரையின் செம்மையாகித்,
திரமாகித்தற்போதநிவர்த்தியாகிச் சிவமாகிச்சிவாநுப
வச்செல்வமாகி, யரமாகியானந்தபோதமாகி யானந்தா
தீதமதாயமர்ந்ததேவே. (சா)

இந்தியமாய்க்கரணாதியனைத்துமாகி யியல்புருடனா
ய்க்காலபரமுமாகிப், பந்தமற்றவியோமமாய்ப்பரமாய
ப்பாற்பரம்பரமாய்விசுவமுண்டபான்மையாகி, வந்தவு
பசாந்தமதாய்மௌனமாகி மகாமௌனநிலையாகிவயங்
காநின்ற, வந்தமிறும்பதமாய்த்தற்பதமாயொன்றும
சிபதமாயதீதமாயமர்ந்ததேவே. (எ)

நின்மயமாயென்மயமாயொன்றுங்காட்டாநிராமய
மாய்நிருவிகற்பநிலையாய்மேலாந், தன்மயமாய்த்தற்பர
மாய்விமலமாகித்தடத்தமாய்ச்சொரூபமாய்ச் சகசமாகி
ச், சின்மயமாய்ச்சிற்பரமாயசலமாகிச் சிற்சொலிதமா
யகண்டசிவமாயெங்கு, மன்மயமாய்வாசகாதீதமாகி ம
னாதீதமாயமர்ந்தமௌனத்தேவே. (அ)

அளவிறந்தநெடுங்காலஞ்சித்தர்யோக ரறிஞர்மல
ரயன்முதலோரனந்தவேதங், களவிறந்துங்காணுதியிற
ந்துஞ்செய்யுங்கடுந்தவத்துங்காண்பரிதாகடவுளாகி, யு
ளவிறந்தவெம்போல்வாருள்ளத்துள்ளேயூறுகின்றதெ
ள்ளமுதலூறலாகிப், பிளவிறந்துபிண்டாண்ட முழுதுந்
தானாய்ப்பிறங்குகின்றபெருங்கருணைப்பெரியதேவே.

வாயாகிவாயிறந்தமௌனமாகிமதமாகி மதங்கடந்
தவாய்மையாகிக், காயாகிப்பழமாகித்தருவாய்மற்றைக்
கருவிகாரணாதிகளின்கலப்பாய்பெற்ற, தாயாகித்தந்தை
யாய்ப்பிள்ளையாகித்தானாகிநானாகிச்சகலமாகி,யோயாத
சத்தியெலாமுடையதாகி யொன்றாகிப்பலவாகியோங்
குந்தேவே. (௰)

அண்டங்கள்பலவாகியவற்றின்மேலுமளவாகியள
வாதவதீதமாகிப், பிண்டங்களனந்தவகையாகிப் பிண்ட
ம்பிறங்குகின்றபொருளாகிப்பேதந்தோற்றும், பண்ட
ங்கள்பலவாகியிவற்றைக்காக்கும்பதியாகியானந்தம் ப
ழுத்துச்சாத்தங், கொண்டெங்குநிழல்பரப்பித்தழைத்
தஞானக்கொழுங்கடவுட்டருவாகிக்குலவுந்தேவே. ()

பொன்னாகிமணியாகிப்போகமாகிப்புறமாகியகமாகி
ப்புனிதமாகி,மன்னாகிமலையாகி கடலுமாகிமதியாகிரவி
யாகிமற்றுமாகி, முன்னாகிப்பின்னாகிநடுவுமாகி முழுதா
கிநாதமுறமுழங்கியெங்கு,மின்னாகிப்பாவியின்பவெள்
ளந்தேக்க, வியன்கருணைப் பொழிமுகிலாய் விளங்குந்
தேவே. (௰௧)

அரிதாகியரியதினுமரியதாகியநாதியா யருளதாகிப் பெரிதாகிப்பெரியதினும்பெரியதாகிப்பேதமாயபேதமாய்ப்பிறங்காநின்ற, கரிதாகிவெளிதாகிக்கலைகளாகிக் கலைகடந்தபொருளாகிக்காரணாதீதத், தெரிதானவெளிநடுவிலருளாம்வண்மைச்செழுங்கிரணஞ்சுடராகித்திகழுந்தேவே. (௰௩)

உருவாகியுருவினிலுள்ளுருவமாகி யுருவத்திலுருவாகியுருவுள்ளொன்றா, யருவாகியருவினிலுள்ளருவமாகியருவத்திலருவாகியருவுள்ளொன்றாய்க்குருவாகிச்சத்துவசிற்குணத்ததாகிக் குணரகிதப்பொருளாகிக்குலவாநின்ற, மருவாகிமலராகிவல்லியாகி மகத்துவமாயணுத்துவமாய்வயங்குந்தேவே. (௰௪)

சகலமாய்க்கேவலமாய்ச்சுத்தமாகிச்சராசரமாயல்லவாய்த்தானேதானா, யகலமாய்க்குறுக்கமாய்நெடுமையாகி யவையனைத்துமணுகாதவசலமாகி, யிகலுறுத்துணையாகித்தனியதாகியெண்குணமா யெண்குணத்தெம்மிறையாயென்று,முகலிலாத்தண்ணருள்கொண்டுயிரையெல்லாமூட்டிவளர்த்திடுங்கருணையோவாத்தேவே. ()

வாசகமாய்வாச்சியமாய் நடுவாயந்தவாசகவாச்சியங்கடந்தமௌனமாகித், தேசகமாயிருளகமாயிரண்டுங்காட்டச்சித்தகமாய்வித்தகமாய்ச்சிறிதும்பந்த, பாசமுறுப்பதியாகிப்பசுவுமாகிப்பாசநிலையாகியொன்றும்பகராதாகி, நாசமிலாவெளியாகியொளிதானாகி நாதாந்தமுடிவினடநவிற்றுந்தேவே. (௰௬)

சகமாகிச்சீவனாயீசனாகிச் சதுமுகனாய்த்திருமாலாய
ரன்றாகி,மகமாயைமுதலாய்க்கூடத்தனாகி வான்பிரம
மாகியல்லாவழக்குமாகி,யிகமாகிப்பரமாகிச்சமயகோடி
யெத்தனையுமாகியவைஎட்டாவான்கற், பகமாகிப்பரமா
கிப்பரமமாகிப்பராபரமாய்ப்பரம்பரமாய்ப்பதியுந்தே.

விதியாகியரியாகிக்கிரீசனாகி விளங்குமகேச்சுரனா
கிவிமலமான, நிதியாகுஞ்சதாசிவனாய்விந்துவாகி நிகழ்
நாதமாய்ப் பரையாய்நிமலானந்தப், பதியாகும்பரசிவ
மாய்ப்பரமாய்மேலாய்ப்பக்கமிரண்டாயிரண்டும் பகரா
தாகிக், கதியாகியளவிறந்தகதிகளெல்லாங் கடந்துநின்
றுநிறைந்தபெருங்கருணைத்தேவே. (௰அ)

மானாகிமோகினியாய்விந்துவாகிமற்றவையாற்கா
ணாதவானமாகி, நானாகிநானல்லனாகிநானே நானாகும்ப
தமாகிநான்றான்கண்ட, தானாகித்தானல்லனாகித்தானே
தானாகும்பதமாகிச்சகசஞான, வானாகிவானடுவில் வய
ங்குகின்றமௌனநிலையாகியெங்கும்வளருந்தேவே. ()

மந்திரமாய்ப்பதமாகிவன்னமாகி வளர்கலையாய்த்
தத்துவமாய்ப்புவனமாகிச், சந்திரனாயிந்திரனாயிரவியா
கித்தானவராய்வானவராய்த்தயங்காநின்ற, தந்திரமாயி
வையொன்று மல்லவாகித் தானாகித்தனதாகித்தானான்
காட்டா, வந்தரமாயப்பாலாயதற்கப்பாலாயப்பாலுக்க
ப்பாலாயமர்ந்ததேவே. (உ௰)

மலைமேலுங்கடன்மேலுமலரின்மேலும் வாழ்கின்றமுழுவுருவின்வயங்குங்கோவே, நிலைமேலுநெறிமேலு நிறுத்துகின்றநெடுந்தவத்தோர்நிறைமேலுநிகழ்த்தும் வேதக், கலைமேலுமெம்போல்வாருளத்தின்மேலுங் கண்மேலுந்தோண்மேலுங்கருத்தின்மேலுந், தலைமேலுமுயிர்மேலுமுணர்வின்மேலுந்தருமன்பின்மேலும்வளர்தாண்மெய்த்தேவே. (௨௧)

பொற்குன்றேயகம்புறமும்பொலிந்துநின்ற பூரணமேயாரணத்துட்பொருளேயென்றுங், கற்கின்றோர்க்கினியசுவைக்கரும்பேதானகற்பகமேகற்பகத்திங்கனியேவாய்மைச்,சொற்குன்றாநாவகத்துண் மாறுவின்பந் தோற்றுகின்றதிருவருட்சீர்ச்சோதியேவிண்,ணிற்கின்றசுடரேயச் சுடருள்ளோங்கு நீளொளியேயவ்வொளிக்குணிறைந்ததேவே. (௨௨)

தேசுவிரித்திருளகற்றியென்றுமோங்கித் திகழ்கின்றசெழுங்கதிரேசெறிந்தவாழ்க்கை, மாசுவிரித்திடுமனத்திற்பயிலாத்தெய்வமணிவிளக்கே யாநந்தவாழ்வே யெங்குங், காசுவிரித்திடுமொளிபோற்கலந்துநின்றகாரணமேசாந்தமெனக்கருதாநின்ற, தூசுவிரித்துடுக்கின்றோர்தம்மைநீங்காச் சுகமயமேயருட்கருணை துலங்குந்தேவே. (௨௩)

கோவேயென்குணக்குன்றே குன்றுஞானக்கொழுந்தேனேசெழும்பாகேகுளிர்ந்தமோனக், காவேமெய்யறிவின்பயமேயென்றன்கண்ணேமுக்கண் கொண்ட

கரும்பேவானத், தேவேயத்தேவுக்குந்தெளியவொண்ணாத்தெய்வமேவாடாமற்றிகழ்சிற்போதப், பூவேயப்பூவிற்றுமணமேயெங்கும்பூரணமாய் நிறைந்தருளும்புனிதத்தேவே. (உச)

வானேயவ்வானுலயுங்காற்றேகாற்றின் வருநெருப்பேநெருப்புநீர்வருவேநீரிற், றேனேயம்புவியே யப்புவியிற்றங்குந் தாபரமேசங்கமமேசாற்றுகின்ற, வூனேநல்லுயிரேயுள்ளொளியேயுள்ளத் துணர்வேயவ்வுணர்வுகலந்தூறுகின்ற, தேனேமுக்கனியே செங்கரும்பேபாகின்றீஞ்சுவையேசுவையனைத்துந்திரண்டதேவே. ()

விண்ணேவிண்ணுருவேவிண்முதலேவிண்ணுள்வெளியேயவ்வெளிவிளங்குவெளியேயென்றன், கண்ணேகண்மணியேகண்ணொளியேகண்ணுட்கலந்துநின்றகதிரேயக்கதிரின்வித்தே, தண்ணேதண்மதியே யம்மதியிற்பூத்ததண்ணமுதே தண்ணமுதசாரமேசொற், பண்ணேபண்ணிசையே பண்மயமேபண்ணின்பயனே மெய்த்தவர்வாழ்த்திப்பரவுந்தேவே (உரு)

மாணேயத்தவருளத்தேமலர்ந்தசெந்தாமரைமலரின்வயங்குகின்றமணியேஞானப், பூணேமெய்ப்பொருளேயற்புதமேமோனப்புத்தமுதே யானந்தம்பொலிந்தபொற்பே, யாணேபெண்ணுருவமேயலியேயொன்றுமல்லாதபேரொளியேயனைத்துந்தாங்குந்தூணேசிற்சுகமேயச்சுகமேற்பொங்குஞ் சொரூபானந்தக்கடலேசோதித்தேவே. (உஎ)

பூதமேயவைதோன்றிப்புகுந்தொடுக்கும் புகலிட மேயிடம்புரிந்தபொருளேபோற்றும், வேதமேவேதத் தின்விளைவேவேதவியன்முடிவேயம்முடிவின் விளங்கு ங்கோவே, நாதமேநாதாந்தநடமேயந்த நடத்தினையுண் ணடத்துகின்றநலமேஞான, போதமே போதமெலாங் கடந்துநின்றபூரணமேயாகியருட்பொலிந்ததேவே. ()

ஞாலமேஞாலமெலாம்விளங்கவைத்த நாயகமேக ற்பமுதனவிலாநின்ற, காலமேகாலமெலாங் கடந்தஞா னக்கதியேமெய்க்கதியளிக்குங்கடவுளேசிற் கோலமே குணமேயுட்குறியேகோலங்குணங்குறிகள் கடந்துநின் றகுருவேயன்பர், சீலமேமாலறியாமனத்திற்கண்டசெ ம்பொருளேயும்பர்பதஞ்செழிக்குந்தேவே. (௨௯)

தத்துவமேதத்துவாதீதமேசிற்சயம்புவேயெங்கு நிறைசாட்சியேமெய்ச், சத்துவமேசத்துவத்தின்பய னேயின்பந் தந்தருளும்பெருவாழ்வாஞ் சாமியேயெஞ், சித்தநிலைதெளிவிக்குமொளியேசற்றுந் தெவிட்டாத தெள்ளமுதேதேனேயென்றுஞ், சுத்தநெறி திறம்பா தாரறிவிற்றோய்ந்தசுகப்பொருளேமெய்ஞ்ஞானந்துல ங்குந்தேவே. (௩௰)

யோகமேயோகத்தின்பயனேயோகத்தொருமுத லே யோகத்திலோங்குந்தூய, போகமே போகத்தின் பொலிவேபோகம்புரிந்தருளும்புண்ணியனேபுனிதஞா ன, யாகமேயாகத்தின்விளைவேயாகத் திறையேயவ்வி

றைபுரியுமின்பேயன்பர், மோகமேமோக மெலாமழித்
துவீறுமோனமேமோனத்தின்முளைத்ததேவே. (௩௧)

காட்சியேகாண்பதுவேரூபமேயுட்கண்ணுடையா
ர்கண்ணிலைவந்தகளிப்பேயோங்கு, மாட்சியேயுண்மை
யறிவின்பமென்னவயங்குகின்ற வாழ்வேமாமௌனக்
காணியாட்சியேயாட்சிசெயுமாசேசுத்தவறிவேமெய்ய
ன்பதெள்ளமுதேநல்ல, *சூட்சியேசூட்சியெலாங்கடந்
துநின்றதுரியமேதுரியமுடிச்சோதித்தேவே. (௩௨)

மறைமுடிக்குப்பொருத்தமுறுமணியேஞானவா
ரிதியேயன்பர்நடம்மனத்தேநின்ற, குறைமுடிக்குங்கு
ணக்குன்றேகுன்றுமோனக்கோமளமே தூயசிவக்கொ
ழுந்தேவெள்ளைப், பிறைமுடிக்கும்பெருமானே துளவ
மாலைப்பெம்மானேசெங்கமலப்பிரானேயிந்த,விறைமு
டிக்குமூவர்கட்குமேலாய்நின்றவிறையேயிவ்வுருவுமின்
றியிருந்ததேவே. (௩௩)

கோதகன்றயோகர்மனக்குகையில்வாழுங்குருவே
சண்முகங்கொண்டகோவேவஞ்ச, வாதகன்றஞானியர்
தம்மதிலூறும்வானமுதேயானந்தமழையேமாயை வே
தகன்றமுத்தர்களைவிழுங்குஞான வேழமேமெய்யின்ப
விருந்தேநெஞ்சிற், றீதகன்றமெய்யடியார் தமக்குவாய்த்
தசெல்வமேயெல்லையிலாச்சீர்மைத்தேவே. (௩௪)

---

* எதுகை நயம் பற்றி நின்றது.

அருளருவிவழிந்துவழிந்தொழுகவோங்கு மானந்
தத்தனிமலையேயமலவேதப், பொருளளவு நிறைந்தவ
ற்றின்மேலுமோங்கிப்பொலிகின்றபரம்பொருளேபூர
ணமாகி, யிருளறுசுற்பிரகாசமயமாஞ்சுத் தவேதாந்தப்
பெருவெளிக்குளிருந்தவாழ்வே, தெருளளவுமுளமுழு
துங்கலந்துகொண்டு தித்திக்குஞ்செழுந்தேனேதேவ
தேவே. (௧௫)

அளவையெலாங்கடந்துமனங்கடந்துமற்றையறி
வையெலாங்கடந்துகடந்தமலயோக, ருளவையெலாங்
கடந்துபதங்கடந்துமேலையொன்றுகடந்திரண்டு கடந்
துணரச்சூழ்ந்த, களவையெலாங்கடந்தண்டபிண்டமெ
ல்லாங் கடந்துநிறைவானசுகக்கடலேயன்பர்,வளவைஎ
யெலாமிருளகற்றுமொளியேமோன வாழ்வேயென்னு
யிர்க்குயிராய்வதியுந்தேவே. (௧௬)

வன்புகலந்தறியாதமனத்தோர்தங்கண் மனங்கலந்
துமதிகலந்துவயங்காநின்ற, வென்புகலந்துன்கலந்துபு
லன்களோடுமிந்திரியமவைகலந்துள்ளியங்குகின்ற, வ
ன்புகலந்தறிவுகலந் துயிரைம்பூதமான்மாவுங்கலந்துகல
ந்தண்ணித்தூறி, யின்புகலந் தருள்கலந்து தூரும்பிப்
பொங்கியெழுங்கருணைப்பெருக்காறேயின்பத்தேவே.

தண்ணமுதமதிகுளிர்ந்தகிரணம்வீசத் தடம்பொ
ழிற்பூமணம்வீசத்தென்றல்வீச, வெண்ணமுதப்பளிக்
குநிலாமுற்றத்தேழன்னிசைவீசத்தண்பனிநீரெடுத்து
வீசப், பெண்ணமுதமனையவர்விண்ணமுதமூட்டப்பெ

றுகின்றசுகமனைத்தும்பிற்பட்டோடக், கண்ணமுதத்து டம்புயிர்மற்றனைத்துமின்பங்கலந்துகொளத் தருங்கரு ணைக்கடவுட்டேவே. (௩அ)

சுழியாதவருட்கருணைப்பெருக்கேயென்றுந் தூண் டாதமணிவிளக்கின்சோதியேவா, ழியாதுகதிர்பர ப்புஞ்சுடரேயன்பர்க்கோவாதவின்பருளுமொன்றேவி ண்ணோர், விழியாலுமொழியாலுமனத்தினாலும்விழை தருமெய்த்தவத்தாலும்விளம்புமெந்த,வழியாலுங்கண் டுகொளற்கரிதாய்ச்சுத்தமௌனவெளியூடிருந்து வயங் குந்தேவே. (௩௯)

சொல்லொழியப்பொருளொழியக்கரணமெல்லா ஞ்சேர்ந்தொழியவுணர்வொழியத்துளங்காநின்ற, வல் லொழியப்பகலொழிய நடுவேநின்றவானந்த வனுபவ மேயதீதவாழ்வே,நெல்லொழியப்பதர்கொள்வார்போ லவின்ப நிறைவொழியக்குறைகொண்மத நெறியோர் நெஞ்சக், கல்லொழியமெய்யடியரிதயவெல்லாங் கலந் துகலந்தித்திக்கின்றகருணைத்தேவே. (சய)

அலைகடலும்புவிவரையுமனல்கானீரு மந்தரமுமற் றையகிலாண்டம்யாவு, நிலைகுலையாவண்ணமருள்வெளி யினூடுநிரைநிரையாநிருத்தியுயிர்நிகழும்வண்ணந், தலை குலையாத்தத்துவஞ்செய் திரோதைமென்னுந் தனியா ணைநடத்தியகுட்டலத்திலென்றுமலைவறவீற்றிருந்தரு ளுமாசேமுத்தி வழித்துணையேவிழித்துணையுண்மணி யாந்தேவே. (சக)

வரம்பழுத்தநெறியேமெய்ந்நெறியிலின்ப வளம் பழுத்தபெருவாழ்வேவானோர்தங்கள், சிரம்பழுத்தபதப்பொருளேயறிவானந்த சிவம்பழுத்தவநுபவமேசிதாகாசத்திற், பரம்பழுத்தநடத்தரசேகருணையென்னும்பழம்பழுத்தவான்றருவேபரமஞானத், திரம்பழுத்தயோகியர்தம்யோகத்துள்ளே தினம்பழுத்துக்கனிந்தவருட்செல்வத்தேவே. (௪௨)

அண்டமெலாங்கண்ணுகக்கொளினுங்காண்டற் கணுத்துணையுங்கூடாவென்றனந்தவேதம், விண்டலறிஓலமிட்டுப்புலம்பமோனவெளிக்குள்வெளியாய் நிறைந்துவிளங்குமொன்றே, ககண்டவடிவாயகண்டமயமாயெங்குங்கலந்துநின்றபெருங்கருணைக்கடவுளே யெஞ்சண்டவினைத்தொடக்கறச் சின்மயத்தைக்காட்டுஞ் சற்குருவேசிவகுருவேசாந்தத்தேவே (௪௩)

பேதமுறுமெய்ப்போத வடிவமாகிப் பெருங்கருணைநிறம்பழுத்துச்சாந்தம்பொங்கிச், சீதமிகுந்தருள்கனிந்துகனிந்துமாறுச்சின்மயமாய்நின்மலமேமணந்துநீங்காவாதரவோடியன் மௌனச்சுவைமேன் மேற்கொண்டானந்தரசமொழுக்கியன்பாலென்றுஞ், சேதமுறுதறிஞருளந்தித்தித்தோங்குஞ்செழுமபுனிதக்கொழுங்கனியேதேவதேவே. (௪௪)

உடல்குளிரவுயிர்தழைக்கவுணர்ச்சியோங்க வுளங்கனியமெய்யன்பருள்ளத்தூடே, கடலனையபேரின்பந்துளும்பநாளுங்கருணைமலர்த்தேன்பொழியுங் கடவுட்

கோவே, விடலரியவெம்போல்வாரிதயந்தோறும், வேதாந்தமருந்தளிக்கும் விருந்தேவேதந், தொடலரியவெளிமுழுதும்பரவிஞானச் சோதிவிரித் தொளிர்கின்ற சோதித்தேவே. (௪௫)

கிரியைநெறியகற்றிமறைமுடிவினின்று கேளாமற்கேட்கின்றகேள்வியேசொற், கரியவறைவிடுத்துநவநிலைக்குமேலேகாணாமற்காண்கின்றகாட்சியேயுள், ளரியநிலையொன்றிரண்டினடுவேசற்று மறியாமலறிகின்றவறிவேயென்று, முரியசதா நிலைநின்ற வுணர்ச்சிமேலோருன்னாமலுன்னுகின்றவொளியாந்தேவே. (௪௬)

சொற்போதற்கரும்பெரியமறைகணாடித்தொடர்ந்துதொடர்ந்தயர்ந்திளைத்துத்துளங்கியேங்கிப் பிற்போதவிரைந்தன்பருளத்தேசென்றபெருங்கருணைப் பெருவாழ்வேபெயராதென்றுந், தற்போதஒழிவினிடை நிறைந்துபொங்கித் ததும்பிவழிந்தோங்கியெல்லாந் தானேயாகிச், சிற்போதத்தகம்புறமுங் கோத்துநின்ற சிவானந்தப்பெருக்கேமெய்ச்செல்வத்தேவே. (௪௭)

பொங்குபலசமயமெனுநதிகளெல்லாம் புகுந்துகலந்திடநிறைவாய்ப்பொங்கியோங்கும், கங்குகரைகாணாதகடலேயெங்குங்கண்ணாகக்காண்கின்றகதியேயன்பர், தங்கநிழல்பரப்பிமயற்சோடையெல்லாந் தணிக்கின்றதருவே பூந்தடமேஞானச், செங்குமுதமலரவருமதியேயெல்லாஞ்செய்யவல்லகடவுளே.தேவதேவனே,

வான்காணுமறைகாணுமலரோன்காணுன் மால்காணுனுருத்திரனுமதித்துக்காணுநான்காணுவிடத்ததனைக்காண்பேமென்று நல்லோர்கணவில்கின்ற நலமேவேட்கை, மான்காணுவுளக்கமலமலர்த்தானின்ற வான்சுடரேயானந்தமயமேயீன்ற, வான்காணுவிளங்கன்று மமலந்தேங்குமன்பர்தமைக்கலந்துகொளுமமலத்தேவே.

மெய்ஞ்ஞானவிருப்பத்திலேறிக்கேள்விமீதேறித்தெளிந்திச்சைவிடுதலேறி, யஞ்ஞானமற்றபடியேறியுண்மையறிந்தபடிநிலையேறியதுநானென்னுங்கைஞ்ஞானங்கழன்றேறிமற்றவெல்லாங் கடந்தேறிமௌனவியற்கதியிலேறி, மெய்ஞ்ஞானமறத்தெளிந்தோர் கண்டுங்காணேமென்கின்றவநுபவமேயின்பத்தேவே. (௫௰)

பற்றியாமுத்தர்தமையெல்லாம்வாழைப்பழம்போலவிழுங்குகின்றபரமேமாசு, பெற்றறியாப்பெரும்பதமேபதத்தைக்காட்டும் பெருமானேயானந்தப் பேற்றின்வாழ்வே, யுற்றறியாதின்னுமின்னு மறைகளெல்லாமோலமிட்டுத்தேடநின்றவொன்றேயொன்றுங், கற்றறியாப்பேதையேன் றனக்குமின்பங் கனிந்தளித்தவருட்கடலேகருணைத்தேவே. (௫௧)

மெய்யுணர்ந்தவாதவூர்மலையைச்சுத்தவெளியாகநிக்கலந்துகொண்ட வெளியேமுற்றும், பொய்யுணர்ந்தவெமைப்போல்வார் தமக்குமின்பம் புரிந்தருளுங் கருணைவெள்ளப்பொற்பேயன்பர், கையுறைந்துவளர்நெல்லிக்கனியேயுள்ளங்கரைந்துகரைந்துருக வவர்கருத்தி

னூடே, யுய்யுநெறியொளிகாட்டிவெளியுமுள்ளுமோங்குகின்றசுயஞ்சுடரேயுன்னைத்தேவே. (௫௨)

ஒலிவடிவுநிறஞ்சுவைகளூற்றமூற்ற முறுதொழிலென்பயன்பல வேறுளவாயெங்கு, மலிவகையானவ்வகையுமொன்றுமொன்றுமாட்டாதாயெல்லாமும் வல்லதாகிச், சலிவகையில்லாதமுதற்பொருளேயெல்லாந் தன்மயமாய்விளங்குகின்ற தனியேயாமெவெண், ணலிவகையல்லாதவகைகடந்துநின்றவருட்சிவமே சிவபோகத்தமைந்ததேவே. (௫௩)

போராயவண்டங்கள்பலவும்பிண்டபேதங்கள் பற்பலவும்பிண்டாண்டத்தின், வாராயபலபொருளுங் கடலுமண்ணுமலையுளவுங்களவுமணலும்வானு, மூராதவான்மினுமனுவுமற்றை யுள்ளனவுமளந்திடலா மோகோவுன்னை, யாராலுமளப்பரிதென்றனந்தவேத மறைந்தினைக்கவதிதூரமாகுந்தேவே. (௫௪)

கற்பங்கள்பலகோடிசெல்லத்தியகனலினடுவூசியின்மேற்காலையூன்றிப், பொற்பறமெய்யுணர்வின்றிவெறக்கமின்றிப் புலர்ந்தெலும்புபுலப்படவைம் பொறியையோம்பி, நிற்பவருக்கொளித்துமறைக்கொளித்தியோகர்ண்முனிவர்க்கொளித்தமரர்க்கொளித்துமேலாஞ், சிற்பதத்திற்சின்மயமாய்நிறைந்துஞானத் திருவாளருட்கலந்ததேவதேவே. (௫௫)

மட்டகன்றநெடுங்காலமனத்தால்வாக்கான் மதித்
திடினும்புலம்பிடினும்வாராதென்றே, கட்டகன்றமெய்
யறிவோர்காரணநீக்கிக்கலையகற்றிக்கருவியெலாங் கழற்
றிமாயை, விட்டகன்றுகருமமல போதம்யாவும் விடுத்
தொழித்துச்சகசமலவிக்கநீக்கிச், சுட்டகன்றுநிற்கவவ
ர்தம்மைமுற்றுஞ் சூழ்ந்துகலந்திடுஞ்சிவமே துரியத்
தேவே. (௫௬)

உருநான்குமருநான்குநடுவேநின்றவுருவருவுமொ
ன்றுமிவையுடன்மேலுற்ற, வொருநான்குமிவைகடந்து
வொன்றுமாயவ்வொன்றிநடுவாய் நடுவுள்ளொன்றாய்நி
ன்றே,யிருநான்குமமைந்தவரைநான்கிணோடுமெண்ணா
ன்கின்மேலிருந்துமிறையேமாயைக்,கருநான்கும்பொ
ருணான்குங்காட்டுமுக்கட் கடவுளேகடவுளர்கள் கருதுந்
தேவே. (௫௭)

பாங்குளநாந்தெரிதுமெநத் துணிந்துகோடிப்பழ
மறைகடனித்தனியேபாடிப்பாடி,யீங்குளதென்றுங்கு
ளதென்றோடியோடியிளைத்திளைத்துத் தொடர்ந்துதொ
டர்ந்தெட்டுந்தோறும்,வாங்குபரவெளிமுழுதுநிண்டுநீ
ண்டுமறைந்துமறைந்தொளிக்கின்றமணியேயெங்குந்,
தேங்குபரமானந்தவெள்ளமே சச்சிதானந்தவருட்சிவ
மேதேவதேவே. (௫௮)

எழுத்தறிந்துதமையுணர்ந்தயோர்கருள்ளத்தியல்றி
வாந்தருவினிலன்பெனுமோருச்சி, பழுத்தளிந்துமெள
னநறுஞ்சுவைமேற்பொங்கிப்பதம்பொருந்தவறுபவிக்

கும்பழமேமாயைக்கழுத்தரிந்துகருமமலத் தலையைவீ
சுங்கடுந்தொழிலோர்தமக்கேநற்கருணைகாட்டி, விழுந்
துணையாயமர்ந்தருளும் பொருளேமோன வெளியினி
றையானந்தவிளைவாந்தேவே. (௫௯)

உருத்திரர்நாரணர்பிரமர்விண்ணோர் வேந்தருறுக
ருடர்காந்தருவரியக்கர்பூதர், மருத்துவர்யோகியர்சித்த
ர்முனிவர்மற்றைவானவர்கண்முதலோர்தம் மனத்தாற்
றேடிக், கருத்தழிந்து தனித்தனியேசென்று வேதங்க
ளைவினவமற்றவையுங்காணேமென்று, வருத்தமுற்றுங்
கவரோடுபுலம்பநின்ற வஞ்சவெளியேயின்ப மயமாந்
தேவே. (௬௰)

பாயிரமாமறையனந்தமனந்தமின்னும்பார்த்தளந்
துகாண்டுமெனப் பல்கான்மேவி, யாயிரமாயிரமுகங்க
ளாலும்பன்னாளளர்தளர்ந்தோரணுத்துணையு மளவுகா
ணா, தேயிரங்கியழுதுசிவசிவவென்றேங்கித் திரும்பவ
ருட்பரவெளிவாழ்சிவமேயின்ற, தாயிரங்கிவளர்ப்பது
போலெம்போல்வாரைத்தண்ணருளால் வளர்த்ததென்
றுந்தாங்குந்தேவே (௬௧)

அந்தரமிங்கறிவோமற்ற தனிலண்டமடுக்கடுக்கா
யமைந்தவுளவறிவோமாங்கே,யுந்துறும்பல்பிண்டநிலை
யறிவோஞ்சீவனுற்ற நிலையறிவோமற்றனைத்துநாட்டு,
மெந்தைநினதருள்விளையாட்டந்தோவந்தோவெள்ளள
வுமறிந்திலோ மென்னேயென்று, முந்தனந்த மறைக
ளெலாம்வழுத்தநின்றமுழுமுதலேயன்பர்குறைமுடிக்
குந்தேவே. (௬௨)

தோன்றுபரசாக்கிரமுங்கண்டோமந்தச் சொப்ப னமுங்கண்டோமேற்சுழுத்திகண்டோ, வான்றபரதுரி யநிலைகண்டோமப்பாலதுகண்டோமப்பாலா மதுவுங்க ண்டோமேன்றவுபசாந்தநிலைகண்டோமப்பா லிருந்தநி னைக்காண்கிலோமென்னேயென்று, சான்றவுபனிடங்க ளெல்லாம்வழுத்தநின்றதன்மயமேசின்மயமே சகசத் தேவே. (௬௩)

பரிக்கிரகநிலைமுழுதுந்தொடர்ந்தோமேலைப்பரவி ந்துநிலையனைத்தும்பார்த்தோம்பாச, மெரிக்குமியற்பர நாதநிலைக்கணமெல்லவெய்தினே மப்பாலு மெட்டிப் போனோர், தெரிக்கரியவெளிமூன்றுந் தெரிந்தோமெங் குஞ்சிவமேநின்சின்மயமோர்சிறிதுந்தேரேந்,தரிக்கரி தென்றாகமங்க ளெல்லாம்போற்றத் தனிநின்றபரம் பொருளேசாந்தத்தேவே. (௬௪)

மணக்குமலர்தேனுண்டவண்டே போலவளர்பர மானந்தமுண்டுமகிழ்ந்தோரெல்லா, மிணக்கமுறக்கலந் துகலந்தீதமாதற்கியற்கைநிலையாததுதா னெம்மாற்கூ றுங், கணக்குவழக்கனைத்தினையுங்கடந்ததந்தோ காண் பரிதிங்கெவர்க்குமெனக்கலைகளெல்லாம், பிணக்கறநி ன்றோலமிடத்தனித்துநின்ற பெரும்பதமேமதாதீதப் பெரியதேவே. (௬௫)

பொதுவென்றும்பொதுவிடைம்புரியாநின்ற பூர ணசிற்சிவமென்றும்போதானந்த, மதுவென்றும்பிரம

மென்றும்பரமமென்றும்வகுக்கின்றோர் வகுத்திடுகவ
துநானென்று, மிதுவென்றுஞ்சுட்டவொணாததனாற்சு
ம்மாவிருப்பதுவே துணிவெனக்கொண் டிருக்கின்றோ
ரை; விதுவென்றதண்ணளியாற்கலந்துகொண்டு விளங்
குகின்றபெருவெளியேவிமலத்தேவே. (௩௬)

அருமறையாகமங்கண்முதனுலீறெல்லா மமைந்
தமைந்துமற்றவைக்குமப்பாலாகிக், கருமறைந்தவுயிர்
கடொறுங்கலந்துமேவிக் கலவாமற்பன்னெறியுங்கடந்
துஞானத், திருமணிமன்றகத்தின்ப வுருவாயென்றுந்
திகழ்கருணைநடம்புரியுஞ்சிவமேமோனப்பெருமலையே
பரமவின்பநிலையேமுக்கட்பெருமானேயெத்திறத்தும்
பெரியதேவே. (௩௭)

என்னுயிர்நீயென்னுயிர்க்கோருயிருநீ யென்னின்
னுயிர்க்குத்துணைவனீயென்னையீன்ற, வன்னைநீ என்னு
டையவப்பநீயென்னரும்பொருணீயென்னிதயத்தன்பு
நீயென், னன்னெறிநீயெனக்குரியவுறவுநீயென்னற்கு
ருநீயெனைக்கலந்தநட்புநீயென், றன்னுடையவாழ்வுநீஎ
ன்னைக்காக்குந்தலைவநீ கண்மூன்றுதழைத்ததேவே. ()

தானாகித்தானல்லதொன்றுமில்லாத்தன்றமையனு
யெவ்வெவைக்குந்தலைவனாகி, வானாகிவெளியனலாய்நீரு
மாகிமலர்தலையவுலகாகிமற்றுமாகித், தேனாகித்தேனின்
றுஞ்சுவையதாகித்தீஞ்சுவையின்பயனாகித்தேடுகின்ற,

நாணுகினென்னிறையாய்நின்றோய்நின்னைநாயடியே னெவ்வாறுகவிற்றுமாறே. (௬௯)

ஆனேறும்பெருமானேயாசேயென்ற னுயிருக்கொருதுணையேயமுதேகொன்றைக், தேனேறும்லைச் சடையெஞ் சிவனேதில்லைச்செழுஞ்சுடரே யானந்த தெய்வமேயென், ஞானேறுமுயிர்க்குணிறை யொளியேயெல்லாமுடையானேநின்னடிச்சீருன்னியன்பர்வா வானேறுகின்றார்நானொருவன்பாவி மண்ணேறி மயக்கேறிவருந்துற்றேனே. (௭௰)

செஞ்சடையெம்பெருமானேசிறுமானேற்ற செழுங்கமலக்கரத்தவனேசிவனேசூழ்ந்து;மஞ்சடையுமதிற்றில்லைமணியே யோற்றிவளர்மருந்தே யென்னுடைய வாழ்வேவேட்கை,யஞ்சடையவஞ்சியர்மாலடையவஞ்சமடையநெடுந்துயரடையவகன்றபாவி, நெஞ்சடையனினைதியோநினைதியென்மெய்ந் நெறியுடையார்நெஞ்சமர்ந்தநீதனன்றே. (௭௧)

அன்னையினும்பரிதினியகருணையூட்டுமாரமுதேயென்னுறவேபரசேயிந்த மன்னுலகிலடியேனை யென்னை துன்பவலையிலகப்படவியற்றிமறைந்தாயந்தோ, பொன்னைமதித்திடுகின்றோர் மருங்கேசூழ்ந்துபோனகமும் பொய்யுரவும்பொருந்தலாற்றல,·னென்னையுளங்கொள்

ளுதியோகொள்கிலாயோ வென்செய்வெனென்செய்
வேனென்செய்வேனே. (எஉ)

படித்தேன்பொய்யுலகியனூலெந்தாய்நீயேபடிப்பித்
தாயன்றியுமப்படிப்பிலிச்சை, யொடித்தேனொடித்
தேனேவொடிப்பித்தாய்பின்னுன்னடியே துணையென
நானுறுதியாகப், பிடித்தேன்மற்றது நீபிடிப்பித்தாயி
ப்பேதையேனின்னருளைப் பெற்றோர்போல,நடித்தே
னெம்பெருமானீ தொன்றுநானேடிநடித்தேனேவல்ல
துநீநடிப்பித்தாயோ (எங)

மத்தேறியலைதயிர்போல் வஞ்சவாழ்க்கை மயலேறி
விருப்பேரிமதத்திேனாடு, பித்தேரியுழல்கின்றமனத்தா
லந்தோபேயேறிநலிகின்றபேதையானேன்வித்தேரிவி
ளைவேறிமகிழ்கின்றோர்போன் மேலேறியன்பரொளம்
விளங்குகின்ற,சொத்தேறியுயிர்க்குயிராய்நிறைந்தவெ
ங்களுடையானேயிதுதகுமோவுணர்கிலேனே. (எச)

மதியணிந்தமுடிக்கனியே மணியேயெல்லாம் வல்ல
வருட்குருவேநின்மலர்த்தாள்வாழ்த்திக், கதியணிந்தா
ன்பரொலாமடியேனொன்றுங் கண்டறியேன் கருமத்தா
ர்கலங்கியந்தோபொதியணிந்துதிரிந்துழலுமேருபோ
லப்பொய்யுலகியபொற்சுமந்து புலம்பாநின்றனென், று
தியணிநதநின்னருளென்றனக்கு முண்டோவின்றெனி
லிப்பாவியேன் சொல்வதென்னே. (எரு)

என்னரசேயென்னுயிரேயென்னையீன்றவென்று
யேயென்குருவேஎளியேனிங்கே, தன்னரசேசெலுத்
தியெங்குமுழலாநின்றசஞ்சலநெஞ்சகத்தாலேதயங்கி
யந்தோமின்னரசேபெண்ணமுதேயென்றுமாதர்வெய்
யசிறுநீர்க்குழிக்கண் விழவேயெண்ணிக், கொன்னரை
சேர்கிழக்குருடன்கோல்போல்வீணே குப்புறுகின்றே
ன்மயவிற்கொடியனேனே. (எசு)

அல்விலங்குசெழுஞ்சுடராயடியாருள்ளத் தமர்ந்த
ருளுஞ்சிவகுருவேயடியேனிங்கேயில்விலங்குமடந்தை
யென்றேயெந்தாஎந்த விருப்புலங்கிளையொழித்து மெ
ன்னேபின்னு, மல்விலங்குபாதத்தையர்தம்மாசையென்
னும்வல்விலங்குபூண்டந்தோமயங்கிநின்றேன், புல்வில
ங்குமிதுசெய்யாவோ கோவிந்தப்புலைநாயேன் பிழை
பொறுக்கிற்புதிதேயன்றே. (எஎ)

வன்கொடுமைமலநீக்கியடியார்தம்மை வாழ்விக்கு
ங்குருவேநின்மலர்த்தாளெண்ண முன்கொடுசென்றிடு
மடியேன்றன்னையிந்தமுடமனமிவ்வுலகுமுயற்சிநாடிப்,
பின்கொடுசென்றலைத்* திழுக்குதந்தோநாயேன் பேய்

* இழுக்குது-எ-து. மரூஉவழக்கு. அல்லதூஉம்-ஆ
சிரியர்தொல்காப்பியனார் கூறியகடினசொல்லிலையெ
ன்பதனுற்கோடலுமாம். இங்ஙனமாதல்-இனியேதெம
க்குனருள்வருமோதெனக்கருதி "யேங்குதே"நெஞ்ச
மெனத்தாயுமானார்முதலியபிறசான்றோர்செய்யுட்களா
லுமுணர்கவென்க.

பிடித்தபித்தனைப்போற் பிதற்றுகின்றே, னென்கொடு
மைஎன்பாவமெந்தாயெந்தயென்னுரைப்பே னெங்கு
ருவேனெஃசெய்வேனே. (எஅ)

* உய்குவித்துமெய்யடியார்தம்மையெல்லா முன்
மைநிலைபெறவருளுமுடையாயிங்கே, மைகுவித்தநெடு
ங்கண்ணார்மயக்கிலாழ்ந்துவருந்துகின்றேனல்லாலுன்ம
லர்த்தாளெண்ணிக், கைகுவித்துக்கண்களினீர்பொழிந்
துநாளோர் கணமேனுங்கருதிநினைக்கலந்ததுண்டோசெ
ய்குவித்துக்கொள்ளுநதியோகொள்கிலாயோதிருவுளத்
தையறியேனென்செய்குவேனே. (எகூ)

அருள்வெளியிலானந்தவடிவினின்றுடுகின்றபெ
ருவாழ்வேபரசேயிந்த,மருள்வலையிலகப்பட்டமனத்தா
லந்தோமதிகலங்கிமெய்ந்நிலைக்கோர்வழிகாணேந, யி
ருணெறியிற்கோலிழந்தகுருட்டேமன்போலெண்ணுதெ
ல்லாமெண்ணியேங்கியேங்கி, யுருள்சகடக்கால்போலு
ஞ் சுழலாநின்றே னுய்யும்வகையறியே னிவ்வொதிய
னேனே. (அ௰)

கற்றவனைதனக்குமுணவளிக்குமுன்றன் கருணைநி
லைதனையறியேன்கடையேனிங்கே,யெற்றவனையெறும்
பேபோற்றிரிந்து நாளுநமிளைத்து நினதருள்காணுதெந்
தாயந்தோ, பெற்றவளைக்காணுதபிள்ளைபோலப்பேது

* உய்குவித்தென்பதுனள்-கு-சாரியை.

றுகின்றேன் செய்யும்பிழையைநோக்கி*யிற்றவளைக்கே ள்விடல்போல்விடுதிபேல்யானென்செய்வேனெங்குரு வேனென்சொல்வேனே. (அக)

அடிமைசெயப்புகுந்திடுமெம்பே[illegible]வார் குற்றமாயி ரமும்பொறுத்தருளுமாசேநாயேன், கொடுமையெயும னத்தாலேவருந்தியந்தோகுரங்கின்கைமாலையெனகுலை யாகின்றேன், கடுமைசெயபிறர் தணிந்தாலடிமைதன் னைக்கண்டிருத்தலழகன்றேகருணைக்கெந்தாய், செடிமை யுளப்பாதகனேனென்செய்வேனின்றிருவுளத்தை யறி ந்திலேன்றிகைக்கின்றேனே. (அஉ)

கூம்பாதமெய்ந்நெறி யொருளத்தே யென்றுங்கு றையாதவின்பளிக்குங்குருவேயாசைத், தாம்பாலேயா ப்புண்டுவருந்திநாயேன்றையலார்மையலென்னுஞ் சலதி யாழ்ந்துவோம்பாமலுவர்நீருண்டுயங்குகின்றேனுன்ன டியாக்களைமேலுவந்துநின்றே, தீம்பாலுஞ்சருக்கரையு ந்தேனுநெய்யுந்தேக்குகின்றுரிதுதகுமோதேவதேவே

வெள்ளமணிசடைக்கனியேமூவராகி விரிந்தருளு மொருதனியேவிழலனேனைக், கள்ளமனக் குரங்காட்டு

---

* இற்றவள்-எ-து, மனையறங்காப்போள்.

மாட்டமெலாங் கண்டிருந்துமிரங்கிலையேற் கவலையா
லே, யுள்ளமெலிந்துழல்கின்றசிறியேன் பின்னருய்யும்
வகையெவ்வகையீ துன்னுந்தோறும், பொள்ளெனமெய்
வியர்க்கவுளம்பதைக்கச்சோபம் பொங்கிவழிகின்றது
நான்பொறுக்கிலேனே. (அச)

எனையறியாப்பருவத்தேயாண்டுகொண்டவென்ன
ரசேயென்குருவேயிறையேயின்றுமனையறியாப்பிழை
கருதுமகிழ்நன்போலமதியறியேன்செய்பிழையைமன
த்துட்கொண்டே, தனையறியாமுகத்தவர்போ லிருந்தா
யெந்தாய்தடங்கருணைப்பெருங்கடற்குத் தகுமோகண்
டா, யனையறியாச்சிறுகுழவியாகியிங்கே யடிநாயேனர
ற்றுகின்றேனந்தோவந்தோ. (அரு)

தீவினைநல்வினையெனும் வன்கயிற்றாலிந்தச் சீவர்களை
யாட்டுகின்றதேவேநாயே, னேவினைநேர் கண்மடவார்
மையற்பேயாலிடருழந்துஞ்சலிப்பின்றியென்னேபின்
னு, நாவினையென்பால்வருந்திக்கறண்டுகின்ற நாய்க்கு
நகைதோன்றநின்றுநயக்கின்றேனா, னாவினைவிட்டெரு
துகறந்திடுவான்செல்லு மறிவிலிக்குமறிவிலியேனான
வாறே (அசா)

எம்பெருமானின்விளையாட் டென்சொல் கேளானே
னாமறியாச்சிறியேனைத்தானிங்கே, செம்புனலாற்
குழைந்தபுலாறசுவர்சூழ்பொத்தைச் சிறுவிட்டிலிருட்
டறையிற்சிறைசெய்தந்தோ, கம்பமுறப்பசித்தழலுங்

கொளுந்தவந்தக்காண்முதற்பொறிபுலப்பேய்கவர்ந்து சூழ்ந்துவம்பியற்றக்காமாதியாட்டமொல்லாமடிபிடித்து வருத்தவென்றேவளர்ந்தாயெந்தாய். (அஎ)

அம்பரத்தேயானந்த வடிவாயென்று மாடுகின்றமாமணியேயாசேசனாயே, வம்பாத்தமெனுமுலைக நடையிலந்தோ விடருழந்தேன் பன்னெறியிலெனையிழுத்தே, பம்பரத்தினடியலைப்படுத்துமிந்தப் பாவிமன மெனக்குலயப்படுவதில்லை, கொம்பரற்ற விளங்கொடிபோற்றளர்ந்தேனென்னைக்குறிக்கொள்ளக்கருதுதியோ குறித்திலாயோ. (அஅ)

கண்ணுடைய நுதற்கரும்பேமன்றிலாடுங்காரணகாரியங்கடந்தகடவுளேயின், றண்ணுடைய மலரடிக்கோர்சிறிதுமன்பு சார்ந்தேனோசெம்மரம்போற்றணிந்த நெஞ்சேன், பெண்ணுடைய மயலாலே சுழல்கின்றேனென்பேதைமையையென்புகல்வேன்பேயனேனைப், புண்ணுடையபுழுவிரும்புமயுள்ளென்கேனேபுலைவிழைந்து நிலைவெறுத்தேன்புலையனேனே. (அகூ)

பொன்னுடையாரிடம்புகவோவவர்கட்கேற்கப்பொய்மொழிகள்புகன்றிடவோபொதிபோலிந்தக், கொன்னுடையாவுடல்பருக்கப்பசிக்குச்சோறு கொடுக்கவோ குளிர்க்காடைகொளவேவஞ்சமின்னிடையார் முடைச்சிறுநீர்க்குழிக்கணந்தோவீழ்ந்திடவோதாழ்ந்தினைத்து விழிக்கவோத, னென்னுடையாயென்னுடையா யென்னையிங்கேயெடுத்து வளர்த்தனையறியே னென்சொல்வேனே. (கூ0)

வருக்ணைத்துவாழ்ந்திடுமோ விழுமோவிந்த மலைக்கூ
டென்றறிஞரெலாம் வருந்தக்கேட்டு, மருகணைத்துக்
கொளப்பெண்பேயெங்கேமேட்டுக்கடைத்திடவெண்
சோறெங்கேயாடையெங்கே,பிருகணுக்குவியப்பெங்
கே, சதியானவிடமெங்கேயென்று திரிந்திளைத்தேனல்
லா, லொருகணத்துமுனைநினைந்ததுண்டோ வென்னையு
டையானேயெவ்வகைநானுய்யுமாறே. (௧௧௧)

பொன்மலையோசிறிதெனப்பேராசைபொங்கிப்புவி
நடையிற்பற்பலகாற்போந்துபோந்துநென்மலையோநி
திமலையோவென்றுதேடி நிலைகுலைந்ததன்றியுனை நினைந்
துதேடி, மன்மலையோமாமணியோமருந்தோவென்றுவ
ழுத்தியதேயில்லையிந்தவஞ்சநெஞ்சம், கன்மலையோவி
ரும்போசெம்மரமோபாறைக்கருங்கல்லோ பாராய்மு
ருட்டுக்கட்டையேயோ. (௧௧௨)

தம்மைமறந்தருளமுதமுண்டுதேக்குந்தகையுடையா
ர் திருக்கூட்டஞ்சார்ந்துநாயேன், வெம்மையெலாந்தவி
ர்ந்துமனங்குளிரக்கேள்வி விருந்தருந்தி மெய்யறிவாம்
வீட்டிலென்றுஞ் செம்மையெலாந்தருமென்ன வினை
மேற்கொண்டு செறியிரவுபகலொன்றுந் தெரியாவண்
ணா, யிம்மையிலேயெம்மையினுங்காணுச்சுத்த வின்ப
நிலையடைவேனோவேழையனே. (௧௧௩)

அடியனேன்பிழையனைத்துமொறுத்தாட்கொண்ட
வருட்கடலே மன்றேறுங்குமரசேயிந்நாள், கொடியனே
ன்செப்பிழையைத் திருவுள்ளத்தே கொள்ளுதியோ

கொண்டுகுலங்குறிப்பதுண்டோ, நெடியனே முதற்க
டவுட் சமுகத்தோர் தந்நெடும்பிழைகளாயிரமும் பொ
றுத்துமாயைபொடியேநேர்நின்றபெருங்கருணைவள்ள
லெனமறைகளோதுவ திங்குனைத்தானன்றே. ()

கண்மயக்கும்பேரிருட்டுக்கங்குற்போதிற் கருத்தறி
யாச்சிறுவனையோர்கடுங்கானத்தே, புண்மயக்கங்கொ
ளவிடுத்தேயொருவன்பின்போ மொருதாய்போன் மா
யையிருளோங்கும்போதின், மண்மயக்கம்பெறும்விட
யக்காட்டிலந்தோமதியிலென்மாழாந்து மயங்கிநீதான்,
வண்மையுற்ற நியதியின்பின்னெனை வீட்டேமறந்தனை
யேபரமேநின்வண்மையென்னே. (௧௫)

நற்றுறையும்பிழைகுறிக்கக்கண்டோ மிந்தநானிலத்
தே மற்றவர்யார்நாடார்வீணே, பற்றுயுமவர்தமைநாம்
பற்றேம்பற்றிப்பற்றுதபற்றுடையார்பற்றியுள்ளே யு
ற்றுயுஞ்சிவபெருமான்கருணையொன்றே, யுறுபிழைக
ளெத்துணையும்பொறுப்பதென்றான், பொற்றுனை விரு
ம்பியதுமன்றுள்ளாடும் பொருளேயென் பிழையனைத்
தும்பொறுக்கவன்றே. (௧௬)

எண்ணியநம்மெண்ணமெலர்முடிப்பான்மன்று ளெ
பெருமானென்றுமகிழ்ந் திறுமாந்திங்கே, நண்ணியமற்
றையர்தம்மைபுறமைபேசி நன்குமதியாதிருந்த நாயி
னேனைத், தண்ணியநல்லருட்கடலே மன்றிலின்பத் தா
ண்டவஞ்செய்கின்றபெருந்தகையேயெங்கள், புண்ணி
குனேபிழைகுறித்துவிடுத்தியாயிற் பொய்யனேனெங்
யற்றென்புரிவேனந்தோ. (௧௭)

அன்பர்திருவுளங்கோயிலாகக்கொண்டேயற்புதச்சி ற்சபையோங்குமகேசயிங்கு, வன்பரிடைச்சிறியேனை மயங்கவைத்துமறைந்தனையேயானந்த வடிவோய்நின் னைத், துன்பவடிவுடைப்பிறரிற்பிரித்துமேலோர்துரிய வடிவினனென்றுசொன்னவெல்லா, மின்பவடிவுடைந் தன்றேயெந்தாயந்தோமென்னளவென் சொல்கேனி வ்வேழையேனே. (௯௮)

புற்றேங்குமரவமெல்லாம்பணியாக்கொண்டு பொ ன்மேனிதனிலணிந்தபொருளேமாயையுற்றோங்குவஞ் சமனக்கள்வனேனை யுளங்கொண்டுபணிகொள்வ துன க்கேயொக்கு, மற்றோங்குமவரெல்லாம்பெருமைவே ண்டும் வன்மனத்தரெனைவேண்டார்வள்வலேநான், கற் றோங்குமறிவறியேன்பலவாச்சொல்லுங் கருத்தறியே னெனக்கருளக்கருதுவாயே. (௯௯)

அருளுடையபரம்பொருளே மன்றிலாடு மானந்தப் பெருவாழ்வேயன்புளோர்தந், தெருளுடையவுளமுழு துங்கோயில்கொண்ட சிவமேமெய்யறிவுருவாந் தெய் வமேயிம்மருளுடையமனப்பேதைநாயினேன் செய்வ ன்பிழையைச்சிறிதேனுமதித்தியாயி, லிருளுடையப வக்கடல்விட்டேறேனென்னை யேற்றுவதற் கெண்ணு கவென்னின்பத்தேவே. (௱)

திருச்சிற்றம்பலம்.

மகாதேவமாலை-முற்றிற்று.